07-06-2024.
O.S.No. 279/2019

பி.வா.சா.1 ராஜகோபால் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

வாதிகள் இருவரையும் தெரியும். அவர்கள் இருவரும் ராமசாமி நாயுடுவின் மக்கள் என்றால் சரிதான். செட்டிநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள சர்வே எண்.574/2 ல் உள்ள 30 செண்ட் நிலத்தை பிரித்துக் கொடுக்கக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.574/2 மொத்த விஸ்தீரணம் 86 செண்ட் என்றால் சரிதான். அந்த 86 செண்ட் நிலம் ஆதியில் யாருக்கு சொந்தமானது என்பது எனக்கு தெரியாது. மேற்படி 86 செண்ட் சொத்தையும் வேறு சில சொத்தையும் சின்னம்மாள் மற்றும் கொண்டம்மாள் ஆகிய இருவரும் சேர்ந்து நாகமநாயுடு என்பவருக்கு 1950 ல் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதே வருடத்தில் அந்த நாகமநாயுடு மேற்படி கிரையம்பெற்ற சொத்தை வாதிகளின் தகப்பனார் ராமசாமி நாயுடுவிற்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதே தேதியில் மேற்படி சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்களையும் ராமசாமி நாயுடு கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ராமசாமி நாயுடு கிரையம் சொத்துக்களில் சில சொத்துக்களை பெருமாள் மாதாரிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பெருமாள் மாதாரிக்கு கிரையம் செய்து கொடுத்தபோது சர்வே எண்.574/2 ல் கண்ட மொத்தம் செண்ட் 86 ல் 56 செண்ட் நிலத்தை மட்டும்தான் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. அவ்வாறு கிரையம் செய்து கொடுத்த 56 செண்ட் சொத்திற்கு நான்குமால் இல்லாமல் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. என் தகப்பனார் 56 செண்ட் நிலத்தை பெருமாள் மாதாரி மகன் பெரிய நாகன் மற்றும் சின்ன நாகன் ஆகியோர்களிடம் கிரையம் வாங்கினார். பாக்கி 30 செண்ட் நிலத்தை எப்போது வாங்கினோம் என்றால் நாங்கள் வாங்கவில்லை. என் அப்பா பெயருக்கு பாக்கி 30 செண்ட் நிலத்தை பொறுத்து யாரும் பவர் எழுதிக் கொடுக்கவில்லை. அந்த 30 செண்ட் எங்கள் வசம் இல்லை. 56 செண்ட் நிலம் மட்டும் தான் உள்ளது. என் அப்பா பெயர் கந்தசாமி நாயுடு. சுப்பா நாயுடு என்பவர் எனது பக்கத்து வீட்டுக்காரர்.

அந்த சுப்பா நாயுடு பாத்தியப்படாத நபர்களிடம் இருந்து 30 செண்ட் நிலத்தைப் பொறுத்து ஒரு பவர் பத்திரம் எழுதி வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தில் மனையடியாக பிரித்தது என் தகப்பனார் கந்தசாமி நாயுடுவும், சுப்பாநாயுடுவும் விற்றார்கள் என்றால் எங்கள் இடத்தை ஒட்டி சுப்பாநாயுடுவின் இடம் இருந்ததால் இரண்டு இடத்தையும் சமப்படுத்தி ஒரே நேரத்தில் என் தகப்பனார் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கும் சுப்பா நாயுடு அவருக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கும் மனையடியாக பிரிக்க நடவடிக்கை மேற்கொண்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் வாதசாஆ.8 ஆவணத்தில் என் தகப்பனார் கந்தசாமி நாயுடுவும் சுப்பா நாயுடுவும் சேர்ந்து எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. என் அப்பாவும், சுப்பாநாயுடுவும் சேர்ந்து மேற்படி 30 செண்ட் நிலத்தை மனையடியாக பிரித்து மோசடியாக விற்பனை செய்து உள்ளார்கள் என்றால் சரியல்ல. லட்சுமியம்மாள் என்பவர் சுப்பாநாயுடுவுக்கு பவர் எழுதிக்கொடுத்ததாக எனக்கு தெரியும். அந்த லட்சுமியம்மாளுக்கே அந்த 30 செண்ட் நிலத்தில் எந்தவித பாத்தியமும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. பவர் எழுதிக்கொடுத்த லட்சுமியம்மாளுக்கு அதில் கண்ட 30 செண்ட் நிலம் எப்படி பாத்தியம் என்று தெரியாது. என் அப்பா கிரையம் பெற்ற 56 செண்ட் நிலம் தவிர 30 செண்டில் வாதிகளுக்கு பாகம் கொடுப்பதில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. என் தகப்பனாரும், சுப்பாநாயுடுவும் சேர்ந்து 8 முதல் 19 பிரதிவாதிகளுக்கு கூட்டாக கிரையம் செய்து கொடுத்து இருப்பதால் கந்தசாமி நாயுடுவின்வாரிசு என்ற முறையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

18, 19ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை- கேட்டுக் கொண்டதற்கிணங்க வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.06.07 15:16:00 +0530

Principal District Judge,
Dindigul.